# குறைவான விலை தரமான நாற்று

## 10.09.2012



சுற்றுச் சூழலைக் காக்கும்விதமாக, மரங்களை நட்டு, பராமரித்து வரும் 'ஈஷா ஃபவுண்டேசனின் பசுமைக் கரங்கள்' அமைப்பு, மரம் வளர்ப்போடு.. தரமான நாற்றுகளை உருவாக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது. இதற்காக தமிழகம் முழுக்க நாற்றப் பண்ணைகளை அமைத்து பராமரித்து வருகிறது. அந்த அமைப்பு! அந்த வரிசையில், ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையத்தில் தென்னை மரங்களுக்கு நடுவே, பசுமை பரப்பிக் கொண்டிருக்கும் நாற்றப் பண்ணைக்குச் சென்ற நாம் .. ஒருங்கிணைப்பாளர்கள் சுவாமி ஸ்ரீமுஹா மற்றும் சுவாமி ரப்யா ஆகியோரைச் சந்தித்தோம். பண்ணையைச் சுற்றிக் காட்டியபடி நம்மிடம் பேசிய ஸ்ரீமுஹா, 2005 – ம் ஆண்டிலிருந்து பல்வேறு அமைப்புகள் மூலம் ஒன்றரை கோடி மரங்களை நட்டுள்ளோம். இன்னும் பல லட்சம் மரங்களை நடுவதற்கும் தீர்மானித்துள்ளோம். தனிநபர் மரம் வளர்ப்பை ஊக்குவிக்கும் விதமாக நாற்றுகளையும் வழங்கி வருகிறோம். அதற்குத் தேவையான நாற்றுகளை உற்பத்தி செய்யும் வகையில், தமிழகம் முழுவதும் 82 நாற்றுப் பண்ணைகளை அமைத்துள்ளோம். அதிகபட்சம் 50 கிலோ மீட்டர் தூரம் பயணித்தால் எங்களுடைய ஏதாவது ஒரு நாற்றுப் பண்ணையை அடைந்துவிட முடியும். எங்கள் பண்ணைகளில்.. குமிழ், மகோகனி, செஞ்சந்தனம், காயா, வேங்கை, மஞ்சக்கடம்பு, தேக்கு, கருமருது, வெண்தேக்கு, மலைவேம்பு, ஈட்டி (ரோஸ்), சிசு, நீர் மருது, தான்றி, புங்கன், பூவரசு, வேம்பு… என முப்பதுக்கும் அதிகமான ரக மரக்கன்றுகளை உற்பத்தி செய்கிறோம். அனைத்தும் நம்நாட்டு மரங்கள். இவற்றின் விதைகள் மூலமாகத்தான் கன்றுகளை உற்பத்தி செய்கிறோம். ஜீவாமிர்தம், அமரிதக்கரைசல் போன்ற இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்தி தரமான நாற்றுகளை உற்பத்தி செய்கிறோம். நாங்கள் உற்பத்தி செய்து வரும் நாற்றுகளை கடந்த ஆண்டு வரை இலவசமாகத்தான் வழங்கி வந்தோம். ஆனால், இலவசமாக கிடைக்கும் பொருட்களின் அருமையை நம் மக்கள் உணர்வதில்லை என்பதால் …. ஒரு கன்று 5 ரூபாய் என குறைந்த விலைக்கு விற்பனை

செய்கிறோம்.

இந்தப் பண்ணையில் ஆண்டுக்கு 2 லட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்கிறோம். மா,பலா,நாவல்,எலுமிச்சை, கொய்யா, சப்போட்டா, மாதுளை மற்றும் நெல்லி போன்ற பழ நாற்றுகள், இயலவாகை, மந்தாரை, மேஃபிளவர் போன்ற வாசனைச் செடிகள் போன்றவற்றையும் உற்பத்தி செய்கிறோம். மரம் நடுவது குறித்த விழிப்பு உணர்வுப் பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகிறோம் என்று விரிவாகச் சொன்னார் ஸ்ரீமுஹா. அவரைத் தொடர்ந்து சுவாமி ரப்யா, மரக்கன்றுகளைக் கொடுப்பதோடு நின்றுவிடாமல்.. நில வடிவமைப்பு மற்றும் சாகுபடி முறைகளையும் சம்பந்தப்பட்ட நிலத்திற்கே சென்று தகுந்த வல்லுநர்கள் மூலம் சொல்லிக் கொடுக்கிறோம். கவாத்து, இடுபொருள் தயாரிப்பு, பாசனமுறை, நோய்க்கட்டுப்பாடு, போன்ற பராமரிப்பு முறைகளையும் இலவசமாகச் சொல்லிக் கொடுக்கிறோம். ‘கைப்பிடி அளவு ரசாயனத்தைக்கூட பசுமைக்கரங்கள் நாற்றுப் பண்ணைக்குள் அனுமதிப்பதில்லை’ என்பதை முக்கிய விதியாக வைத்துள்ளோம். மரம் வளர்ப்போருக்கும் அதையே வலியுறுத்துகிறோம் என்றார்.

‘மக்கள் பணியே.. மகேசன் பணி’ என ஆன்மிகத் தொண்டோடு... சுற்றுச்சூழலுக்கும் தொண்டாற்றுவது.. போற்றத்தக்கதே!

**தொடர்புக்கு**
**சுவாமி ஸ்ரீமுஹா, செல்போன் :94425-90020.**